அந்தியூர்,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : முனைவர்.சீ.நிர்மலா தேவி MCA.,M.Phil.,Ph.D.,

திருவள்ளுவராண்டு 2056, ஆடித் திங்கள் 19-ஆம் நாள்
ந.க.எண்: 486/ஆ/2023 நாள்: 04.08.2025

பொருள்: அந்தியூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – தமிழ்நாடு அமைச்சுப்பணி- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2022-2023ம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டமை - திரு.அ.சந்தோஷ்குமார், இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயலரின் கடித ந.க.எண்.1926/PSD-D2/2023 நாள் 04.09.2023
2. சென்னை -15, கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண் 35681/பி1/2023 நாள் 23.11.2023
3. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்: 474/ஆ/2023 நாள்: 27.11.2023
4. தனியரின் பணிசேர் விண்ணப்பம் நாள்: 01.12.2023
5. ஈரோடு-1, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் கடித ஓ.மு.எண். 000001/உ.இ/2024 நாள்: 02.12.2024
6. சென்னை – 15, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண் TNDCE/4777/2025-B1 நாள் 26.06.2025

****

ஆணை:

பார்வை(1)-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரின் கடிதத்தின்படி, திரு.அ.சந்தோஷ்குமார், என்பார் தொகுதி-IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை(2)ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகளின்படி, இக்கல்லூரியில் காலிப்பணியிடமாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு பணிநியமனம் செய்ய நியமன ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை(3)ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, தனியருக்கு தற்காலிக அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தனியர் இக்கல்லூரியில் 01.12.2023 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

மேலும், பார்வை(5)ல் காணும் ஈரோடு-1, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி, தனியரின் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை பெறப்பட்டது. பார்வை(6)ல் காணும் சென்னை-15, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, இத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்டு பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள்/சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள்(நிலை II) ஆகியோருக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 10இன் கீழ் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்/கல்லூரி முதல்வர்களே நியமன அதிகாரி என்பதால் இணை இயக்குநர்கள்/கல்லூரி முதல்வர்கள் அளவிலேயே சார்ந்த பணியாளர்களுக்கு உரிய நேரத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க அறிவுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.அ.சந்தோஷ்குமார் என்பாருக்கு பணியில் சேர்ந்த நாளான 01.12.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"இப்பணிவரன்முறை தொகுதி IV பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது."

2/12/25

முதல்வர் (மு.கூ.பொ)
(முதல்வா)
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அந்தியூர் - 638 501
ஈரோடு மாவட்டம்

பெறுநர்

திரு.அ.சந்தோஷ்குமார்,
இளநிலை உதவியாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அந்தியூர்.

நகல்:

1. கல்லூரிக் கல்வி ஆணையர்,
   கல்லூரிக் கல்வி இயக்ககம்,
   சென்னை – 15.(தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
   கோவை மண்டலம்,
   கோவை -18. (தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
3. பணிப்பதிவேடு
4. உபரி